THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 6th August 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at eleven of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. OBITUARY REFERENCE TO SRI R. S. K. PANDIAN, Ex-M.L.A.

MR. SPEAKER : It is my painful duty to inform the House of the sad demise of Sri R. S. K. Pandian, an ex-Member of the Legislative Assembly. He was a Member during 1952–57 elected from the Sankaranainarkoil General Constituency. On behalf of the House, I will convey the condolence to the bereaved family. I request the hon. members to stand in silence for a minute as a mark of expressing our sorrow at the death of Sri R.S.K. Pandian and showing our respect to the departed soul.

The House stood in silence for a minute.

II. SWEARING-IN OF A MEMBER.

Sri At. A. P. Soundaravel Servai was sworn in.

III. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

நகராட்சி, பஞ்சாயத்துக்கள் தேர்தல்கள்

* 1 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிற்கு தேர்தல்கள் எப்போது நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த விஷயத்தில் முடிவு ஒன்றும் எடுக்கவில்லை.

திரு. சோ. ஆறுமுகம் : ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றம் ஆகியவைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்துவது பற்றி சர்க்கார் தேர்தல் கமிஷனை கலந்தாலோசித்ததா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தேர்தல் கமிஷனுக்கு எழுதிக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இது சர்க்காரே தீர்மானிக்க வேண்டிய விஷயம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்கமே முடிவு எடுக்க வேண்டிய விஷயம் என்பதால்தான் இந்தச் சபையில் இது பற்றிக் கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. தேர்தல் நடத்தக்க

கூடிய சூழ்நிலை இப்பொழுது இருப்பதால், முனிசிபல் தேர்தல்களை விரைவாக நடத்துவது பற்றி முடிவு எடுக்க அரசாங்கம் தயங்குவானேன் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதில் தயக்கம் ஒன்றும் இல்லை, இது பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது. பரிசிலனை முடிந்தபின் முடிவு தெரியும்.

திரு. இராம அரங்கண்ணல் : இப்பொழுது சென்னை மாநகரில் எட்டு வட்டங்களில் கவுன்சிலர்கள் இல்லாமலிருக்கிறார்கள். நகராட்சி மன்றங்களுக்கு விரைவில் தேர்தல் நடத்தும் உத்தேசம் இல்லையென்றால், அவர்களை அந்தந்த வட்டங்களுக்கு மறு நியமனம் செய்வதற்காவது அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எஸ். முருகையன் : சென்ற ஆண்டுகூட இதுபற்றிக் கேள்வி கேட்டபோது, இது சர்க்காரின் பரிசிலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை நாட்களுக்கு இது பரிசிலனையில் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : முடிவு எடுக்கப்படும் வரை பரிசிலனையில் இருக்கும்.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, 'கூடிய சீக்கிரம் இது பரிசிலனை செய்யப்படும்' என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் உறுதியளித்திருக்கிறார்கள். இதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே தேசிய நெருக்கடி இதற்குக் காரணமாக இருந்தது. 'எக்ஸ்டென்ஷன் ஆக்ட்' டின்படி இது கவனிக்கப்படுகிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அறிவார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுதிருக்கும் முனிசிபல் வார்டுகள், டிவிஷன்கள் ஆகியவை சரியாக அமைக்கப்படவில்லை. டிவிஷன்கள் திருத்தியமைக்கப்படவேண்டும் என்று கோயமுத்தூர், மதுரை போன்ற முனிசிபாலிடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ? அப்படி வந்திருந்தால், அவற்றின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சில நகராட்சி மன்றங்களிடமிருந்து அம்மாதிரி வந்தது. ஆனால், இன்னும் அது பரிசிலனையில் தான் இருந்துகொண்டிருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தேசிய நெருக்கடி நேரத்தில் இடைத் தேர்தல் நடத்தும்போது, ஊராட்சி, நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்களை நடத்தத் தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

6th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். பொதுத் தேர்தலுக்குள்ளாக வார்டுகளைப் பிரிப்பதா என்பது ஒரு பிரச்சினை. அதைப்பற்றி முடிவு செய்யவேண்டும். இப்பொழுதிருக்கிற ஜாப்தாக்களை வைத்துக்கொண்டே தேர்தல் நடத்துவதா என்பது மற்றொரு பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கவேண்டியிருப்பதால்தான் தாமதம் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே வார்டுகள் பிரிக்கப்பட்டிருக்கிற சென்னை மாநகராட்சிக்காவது துரிதமாகத் தேர்தலை நடத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை)

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவ்வளவு காலம் கழித்து தேர்தல் நடக்க இருப்பதாலும், முடிவு எடுக்கப்படுதற்குக் கால தாமதம் ஆவதாலும், நகரசபை வார்டுகளை அதிகப்படுத்தும் யோசனைப் பற்றி துரிதமாக முடிவு எடுக்கப்படுமா? குறிப்பாக, பொதுத் தேர்தலுக்கு முன்பாகவே முடிவு எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை)

உணவு உற்பத்தி (இசையை பயன்படுத்தல்)

*** 2 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு உற்பத்தியைப் பெருக்க இசையைப் பயன்படுத்தும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இசையின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க அரசாங்கத்திடம் தற்சமயம் திட்டமேதுமில்லை. ஆயினும் இசை அப்பியாசங்கள் மூலம் விளைச்சல் பெருகக்கூடிய முகாந்திரம் இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதையொட்டி, கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் இவ்விஷயமாக சிறு அளவில் ஒரு பரிசோதனையை மேற்கொள்ளும் திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : கோவையில் நடைபெற்ற ஆராய்ச்சியின் மூலம் கண்ட முடிவை இந்த மன்றத்திற்கு அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆராய்ச்சிக்கே இப்பொழுதுதான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே எப்படி முடிவு எடுப்பது ?